# 8. மோசே

நாணல் பேழை ஒன்று நதியில் மிதந்தது.
பேழையின் உள்ளே ஓர் அழகான ஆண்குழந்தை. தீய அரக்கனுக்குப் பயந்து தாய் ஒருத்தி பிள்ளையை நாணல் பேழைக்குள் மறைத்து வைத்தாள்



குழந்தைக்கு என்ன
ஆகுமோ என்பதை
அறிந்து
கொள்ளக் குழந்தையின்
அக்கா மிரியாம்
தூரத்தில்
மறைந்து நின்று
கொண்டிருந்தாள்

இளவரசி தோழியருடன் நீராட
வந்தாள்.
அவள் நாணலிடையே
பேழையைக் கண்டாள்.

பேழையைத் திறந்து பார்த்தாள். அழகான ஓர் ஆண்குழந்தையைக் கண்டாள். அவள் குழந்தைக்கு மோசே என்று பெயரிட்டாள்.



ஓடோடி வந்தாள் மிரியாம். குழந்தைக்கு பாலூட்டி வளர்க்க ஓர் பெண்ணை அழைத்து வந்தாள்.



தனது மகன் மோசேயைக் கண்ட தாய் மகிழ்ச்சி அடைந்தாள்.

கடவுள் தனது குழந்தையைக் காப்பாற்றுவார் என நம்பியிருந்தாள்.